# தேசியக்கொடி பயன்பாட்டு விதிக்கோவை

அரசியற்றுறை
தமிழீழ விடுதலைப்புலிகள்

# தேசியக்கொடி

## பயன்பாட்டு விதிக்கோவை

அரசியற்றுறை

தமிழீழ விடுதலைப் புலிகள்

வெளியீடு: மார்ச் 1994



# முன்னுரை


உலகிலுள்ள எல்லா நாடுகளும் தத்தமக்கென தேசியக் கொடிகளை உருவாக்கியுள்ளன. ஒரு நாட்டின் மீது அந் நாட்டின் குடிமக்கள் கொண்டிருக்கும் மதிப்பின், பற்றின் வெளிப்பாடே தேசியக்கொடி வணக்கமாகும். தேசியக் கொடியை ஏற்றிப் போற்றியபின்பே முதன்மையான விழாக்கள், நிகழ்ச்சிகள் என்பன ஒவ்வொரு நாட்டிலும் தொடங்கப்படுகின்றன.

மாற்றாரின் பிடியிலிருந்து தமிழீழ மண்ணை முற்றாக விடுவிப்பதற்கான போராட்டம் வீறுடன் நடைபெற்றுக்கொண்டிருக்கும் அதேவேளையில், ஆயிரக்கணக்கான மாவீரர்களின் உயிர்களை விலைகொடுத்து மாற்றாரிடமிருந்து மீட்டெடுத்த எமது பாரம்பரிய தமிழீழ மண்ணில் தமிழீழ நாட்டுக்கான தேசியக்கொடியை எமது தேசியத்தலைவர் ஏற்றிப்பறக்கவிட்டுள்ளார்.

நாடு உருவாகுதற்கு முன்பே நாட்டுமக்களால் முறைப்படி கொடிவணக்கம் செலுத்தி, கொடிவணக்கப்பாடலை இசைத்து முதன்மை விழாக்களை நிகழ்ச்சிகளை நடத்துவதன் மூலம் தமிழீழமண் தேசியக்கொடி வரலாற்றில் ஒரு புதுமை சேர்த்திருக்கிறது.

உலகம் வியக்கக்கூடிய புதுமையான வரலாற்றைப் பெற்ற எமது தேசியக்கொடியை ஏற்றிப்போற்றும் முறையைத் தமிழீழ மக்கள் அனைவரும் அறிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக ''தேசியக்கொடி பயன்பாட்டு விதிக்கோவை'' என்ற இக்கைநூலை பெருமகிழ்ச்சியுடன் வெளியிடுகின்றோம்.

அரசியற்றுறை<br>
தமிழீழ விடுதலைப் புலிகள்,<br>
நடுவப்பணியகம்.



தேசியக்கொடியிலுள்ள புலி கொடிக்கம்பத்தைப் பார்த்த வாறு பறக்கவிடப்படக்கூடாது. புலியின் பார்வை கொடிக் கம்பத்துக்கு எதிர்ப்புறமாக, கொடி பறக்கும் பக்கமாக இருக்கும் வகையில் கொடி பறக்கவிடப்படவேண்டும்.

# தேசியக்கொடி
# பயன்பாட்டு விதிக்கோவை

**தேசியக் கொடியின் தன்மை:**

ஒரு நாட்டின் தேசிய இனங்கள், நாட்டு மக்களின் பண்புகள், ஆட்சி, இறைமை என்பவை உட்பட அந்த நாட்டைக் குறிக்கின்ற ஒட்டுமொத்தமான பொதுச் சின்னமாகத் தேசியக்கொடி விளங்குகின்றது.

**தேசியக் கொடியின் அமைப்பும், அளவும்:**

ஒவ்வொரு நாட்டினதும் இயல்புகள், நிலைமைகள், எண்ணங்களின் வெளிப்பாடாக அந்த அந்த நாடுகளின் தேசியக்கொடிகளின் சின்னம், நிறம், அளவு, அமைப்பு என்பன வேறுபட்டிருக்கும். தேசியக்கொடிகளின் அளவு பெரும்பாலும் 3:2 என்ற கூறுபாடு (விகிதம்) கொண்டதாக நீள, அகலங்கள் அமைகின்றன. சில நாடுகளின் தேசியக்கொடிகளின் நீள, அகலங்கள் 2:1 என்ற அளவினவாகவும், இன்னும் சில நாடுகளில் 1:1 என்ற அளவைக் கொண்டனவாகவும் (சதுரமாகவும்) அமைகின்றன.


## தேசியக்கொடியின் பெருமையும், கொடி வணக்கமும்:

நாட்டைப்போற்றி வணங்குதற்கீடாகத் தேசியக் கொடிக்கு வணக்கம் செலுத்தப்படுகின்றது. தேசியக் கொடியை வணங்குவது, நாட்டை வணங்குவது போலாகும். நாட்டின் தலைவர், படை, ஆட்சி என்பவற்றை விடவும் உயர்ந்ததாகத் தேசியக்கொடி மதிக்கப்படுகின்றது. எனவேதான், எந்த ஒரு நாட்டிலும் எந்தச் சிறப்பு நிகழ்வுகளின்போதும் நாட்டின் தலைவர், படை அரசுப் பணியாளர், குடிமக்கள் அனைவரும் கொடி வணக்கம் செய்கின்றனர்.


## கொடி வணக்கத்தின்போது தவிர்க்கப்படவேண்டியவை:

தேசியக் கொடிக்கு வழங்கப்படுகின்ற மதிப்பு, சிறப்பு, என்பன அந்த நாட்டைச் சென்றடைவதுபோன்று, தேசியக்கொடிக்கு ஏற்படுத்தப்படும் இழிவு, புறக்கணிப்பு என்பனவும் அதன் நாட்டையே சென்றடையும். எனவேதான், தேசியக்கொடிக்கு ஏற்படுத்தப்படும் இழிவு பெருங்குற்றமாகக் கருதப்பட்டு அக்குற்றத்துக்கு மிகுதியான ஒறுப்பு (தண்டனை) வழங்கப்படுகின்றது.

தேசியக்கொடிக்கு மரியாதை செலுத்துகின்ற கொடி வணக்க நிகழ்வுக்கு நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட சீரான ஒழுங்குமுறை வரையறுக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப் படுகின்றது. கொடியேற்றம், கொடி வணக்கம் என்பனவற்றுக்கான ஒழுங்குமுறை, நடைமுறை நாட்டுக்கு நாடு வேறுபட்ட முறையில் அமைந்திருக்கும். அந்த வரையறுக்கப்பட்டஒழுங்கு முறைகளை மீறுவது தேசியக்கொடிக்கு இழைக்கப்படுகின்ற இழிவாகவே கொள்ளப்படும்.



நாடுகளின் தேசியக்கொடிகள் தவிர்ந்த பிரதேசக்கொடிகள், திணைக்களங்களின் கொடிகள், சங்கங்களின் கொடிகள், பாடசாலைகளின் கொடிகள் போன்ற ஏனைய கொடிகள் எமது தேசியக்கொடியுடன் ஏற்றப்படுவதாயின் தேசியக் கொடியின் கம்பத்தைவிட 2 அடி குறைவான கொடிக் கம்பத்தில் தேசியக்கொடியைவிடப் பெரிதாக அமையாத கொடிகளை தேசியக்கொடியின் இரு புறங்களிலும் தேசியக் கொடி ஏற்றப்பட்டதன் பின் ஏற்றப்படவேண்டும்.



### கொடிமீது கொண்ட பற்று:

சிறப்பு நிகழ்வுகளுக்கான ஊர்வலங்களின் போதுதேசியக்கொடியை ஏந்திச்செல்வதும், ஏந்தி நிற்பதும் கூடத் தேசியக்கொடிக்குச் செலுத்துகின்ற மதிப்பு வணக்கமாகும். தேசியக்கொடி ஏந்துபவர்களும், கொடிக்கம்பத்தைக் காப்பவர்களும் தேசியக்கொடி சிதையவோ அன்றிக் கொடிக்கம்பம் சரியவோ இடமளிக்கமாட்டார்கள்.

தேசியக்கொடியை ஏந்துபவர்கள் ஏந்துகின்ற கொடியைக் கடமை முடிந்ததும் உரிய இடத்தில் வைப் பார்கள் அல்லது தகுதியானவர்களிடம் கையளிப்பார்க எவ்வித இடர் வரினும், உயிரேபோகின்ற நிலைவரினு கொடியைக் கைவிடாத தன்மையைக் கொண்டிருப்பா தாம் ஏந்துகின்ற கொடி சரிந்தாலோ, கீழே விழுந்தாலோ அது தமது நாட்டுக்கு இழுக்காகிவிடும், தமது நாட்டின் ஆட்சி வீழ்ந்ததாகக் கொள்ளப்படும் என்ற உணர்வு அவர்களிடமிருக்கும். பண்டைக் காலத்திலேயே தமிழ்மக்கள் நாட்டின் கொடிமீது கொண்டிருந்த பற்றும், அதற்குக் கொடுத்த மதிப்பும்பற்றி இலக்கியங்கள், வரலாறுகள் எடுத்தியம்புகின்றன.

### துயர நிகழ்வில் தேசியக்கொடி:

தலைவர்கள், சிறப்புக் குடிமக்கள் போன்றோரின் மறைவையொட்டி ஏற்படும் நாட்டின் துயர நிகழ்வின் போது தேசியக்கொடி கொடிக்கம்பத்தின் உச்சிவரை ஏற்றப்பட்டு. கொடிக் கம்பத்தின் நடுப்பகுதிவரை இறக்கிக் கட்டிப் பறக்கவிடப்படுவது வழக்கம். இதன் மூலம் நாட்டின் துயரம் உணர்த்தப்படுகின்றது. கொடிக்கம்பத்தின் நுனியிலே பறக்கின்றகொடி நடுப்பகுதி வரை இறக்கப்பட்டு, அரைக் கம்பத்தில் பறப்பதே நாட்டின்

மிகு துயரை உணர்த்துவதாயின் தேசியக்கொடி சிதைவுறு வதோ இழிவுபடுத்தப்படுவதோ, கீழே வீழ்த்தப்படுவதோ, வீசப்படுவதோ, கால்களில் மிதிக்கப்படுவதோ எண்ணிக் கூடப் பார்க்கமுடியாத நிலையாகும்.

## தமிழீழத் தேசியக்கொடி:


எமது தலைவர் வே. பிரபாகரன் அவர்களால் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கென உருவாக்கப்பட்டு, 1977-ம் ஆண்டுமுதல் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கொடியாக இருந்துவரும் புலிக்கொடியில் உள்ள எழுத்துக்கள் நீக்கப்பட்டு, தமிழீழத்தின் தேசியக் கொடியாக தேசியத் தலைவர் அவர்களால் அறிவிக்கப் பட்டு, 1990-ம் ஆண்டு மாவீரர் நாள் முதல் தமிழீழத் தேசியக்கொடியாக அது இருந்து வருகின்றது.

முதல் தடவையாகத் தமிழீழத் தேசியக்கொடி எமது தேசியத் தலைவர் அவர்களால் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் வீரச்சாவைத்தழுவிய மாவீரர்களை நினைவுகூர்ந்த இரண்டாவது மாவீரர்நாளில், அவரது முகாமில் ஏற்றிவைக்கப்பட்டது.

## நிறங்களும் குறிக்கோளும்:

எமது தேசியக்கொடியை மஞ்சள், சிவப்பு, கறுப்பு, வெள்ளை ஆகிய நான்கு நிறங்கள் அழகுபடுத்துகின்றன.

தனிப்பாங்கான தேசிய இனமான தமிழீழத் தேசிய இனம் தனது சொந்த மண்ணில் தன்னாட்சி அமைத்துக் கொள்ள விழைவது அடிப்படை அரசியல் உரிமை, மனித உரிமையாகும். தமிழீழ மக்கள் நடத்துகின்ற தேசிய விடு தலைப் போராட்டம் அறத்தின் பாற்பட்டது, நியாய மானது என்பதை மஞ்சள் நிறம் சுட்டி நிற்கின்றது.



எமது தேசியக்கொடியுடன் பிற நாடுகளின் தேசியக்கொடிகள் ஏற்றப்படுவதாயின் ஒரே அளவு உயரமுள்ள கொடிக் கம்பங்களில் ஒரே அளவான கொடிகள் ஏற்றப்பட வேண்டும். ஆயினும் எமது தேசியக்கொடிக்கு இடப்புறமாகவே அவை அந்தந்த நாடுகளின் அகரவரிசைப்படி பறக்கவிடப் படவேண்டும்.

தேசிய விடுதலை பெற்ற தமிழீழத் தனியரசை அமைத்துவிடுவதால் மட்டும் முழுமையான விடுதலை பெற்றுவிட்டதாகக் கொள்ளமுடியாது. தமிழீழ சமுதாயத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் ஒழிக்கப்படவேண்டும். வர்க்கசாதிய முரண்பாடுகள் அகற்றப்படவேண்டும். பெண்ணடிமைத்தனம் நீக்கப்பட வேண்டும், இதற்குச் சமுதாய அமைப்பில் புரட்சிகரமான மாற்றங்களைக் கொண்டு வரவேண்டும். சமத்துவமும் சமதர்மமும், சமூக நீதியும் நிலைநாட்டப்பட வேண்டும். இத்தகைய புரட்சிகரமான சமுதாயமாற்றத்தை வேண்டி நிற்கும் எமது அரசியல் இலக்கைச் சிவப்பு நிறம் குறியீடு செய்கின்றது.

விடுதலைப்பாதை கரடுமுரடானது; சாவும், அழிவும், தாங்கொணாத் துன்பங்களும் நிறைந்தது, இத்தனையையும் தாங்கிக் கொள்ள உருக்குப் போன்ற உறுதியான உள்ளம் வேண்டும், அசையாத நம்பிக்கை வேண்டும், தளராத உறுதி வேண்டும் என்பதைக் கறுப்பு நிறம் குறித்துக் காட்டுகின்றது.

அமைப்பினதும், போராட்டத்தினதும் தூய்மையை, நேர்மையை, வெள்ளை நிறம் வெளிப்படுத்திநிற்கின்றது.

**கொடி வணக்க ஒழுங்குமுறை:**

- தேசியக்கொடி ஏற்றப்படும் கொடிக்கம்பத்தின் உயரம் 22' க்குக் குறைவாக இருக்கக் கூடாது.
- தேசியக்கொடியின் அளவு 4 1/2:3 அடியாக இருத்தல் வேண்டும்.
- தேசியக்கொடியுடன் வேறுகொடிகளும் ஏற்றப்படுவதாயின் அக்கொடிகள் தேசியக்கொடியை விடப் பெரிதாக இருக்கக்கூடாது.

- ஏழு பேருக்குக் குறைவானவர்கள் முன்னிலையில் தேசியக்கொடியை ஏற்றுதல் கூடாது.


- தேசியக்கொடியேற்றப்பட்ட கொடிக்கம்பத்தைவிட ஏனைய கொடிக்கம்பங்கள் 2 அடி உயரம் குறைந்தனவாக இருக்கவேண்டும்.

- தேசியக்கொடியுடன் பிறநாடுகளின் தேசியக்கொடிகள் ஏற்றப்படுவதாயின் ஒரே அளவு உயரமுள்ள கொடிக்கம்பங்களில் ஒரே அளவான கொடிகளை ஏற்றலாம். ஆனால் எமது தேசியக்கொடிக்கு இடப் புறமாகவே ஏனைய நாடுகளின் கொடிகள் அந்தந்த நாடுகளின் பெயர் அகர வரிசைப்படி பறக்கவிடப் படவேண்டும்.


- எமது தேசியக்கொடியுடன் பிற நாடுகளின் தேசியக் கொடிகளை ஏற்றுவதாயின் எமது தேசியக்கொடி ஏற்றப்பட்டதன் பின்பே அவை ஏற்றப்படவேண்டும்.

- கொடிகள் இறக்கப்படும்பொழுது ஏனைய நாடுகளின் தேசியக்கொடிகள் முதலில் இறக்கப்பட வேண்டும். இறுதியாகவே எமது தேசியக்கொடி இறக்கப் படவேண்டும். ஏனைய கொடிகள் பறந்துகொண்டிருக்கும்போது எமது தேசியக்கொடியை ஒரு போதும் இறக்கக்கூடாது.

- நாடுகளின் தேசியக்கொடிகள் தவிர, பிரதேசக் கொடிகள், திணைக்களங்களின் கொடிகள், சங்கங்களின் கொடிகள், பாடசாலைகளின் கொடிகள் என்பன எமது தேசியக்கொடியுடன் ஏற்றப்படுவதாயின் அக்கொடிகள் யாவும் தேசியக்கொடியின்



ஊர்வலங்களில் தேசியக்கொடியை எடுத்துச் செல்வ தாயின் கொடியின் உயரத்தின் 4 பங்கு உயரமான கம்பத்தில் மேற்பகுதியில் கட்டி நெஞ்சுக்கு நேராகவோ அன்றி வலத் தோளிலோ ஏந்திச்செல்ல வேண்டும்.



கம்பத்தைவிட 2 அடி குறைவான கம்பத்தில், தேசியக்கொடியைவிட அளவில் பெரிதாக இராத கொடிகளை தேசியக்கொடிக் கம்பத்தின் இரு புறங்களிலும் பறக்கவிடலாம்; ஏற்றலாம்.

- ஊர்வலங்களில் தேசியக்கொடியை எடுத்துச் செல்வதாயின் கொடியின் உயரத்தின் 4 பங்கு உயரமான கம்பத்தின் மேற்பகுதியில் கட்டி நெஞ்சுக்கு நேராகவோ அன்றி வலத்தோளிலோ ஏந்திச்செல்ல வேண்டும். தேசியக்கொடி ஏந்திச் செல்பவருக்கு முன்பாக வேறு எந்தக் கொடியை ஏந்துபவரும் முந்திச் செல்லக்கூடாது.

- கூட்ட மேடைகளில் பேச்சாளரின் தலைக்கு மேலாகப் பின்புறத் தட்டியில் தேசியக்கொடியைக் கட்டலாம்.

- தேசியக்கொடியில் எதுவும் எழுதப்பட்டிருக்கக் கூடாது.

- தேசியக்கொடி கிழிந்தோ, சிதைந்தோ போனால் அதைப் பழந்துணியாகப் பயன்படுத்தவோ, குப்பைத் தொட்டியில் வீசவோ கூடாது.

- தேசியக்கொடியை வணிக விளம்பரத்திற்கோ, விரிப்பிற்கோ அன்றி வெறெந்தத் தேவைகளுக்கோ பயன்படுத்தக்கூடாது.

- குறிப்பிட்ட சில உயர்செயலகக் கட்டடங்களில் மட்டும் தேசியக்கொடி கொடிக்கம்பத்தில் ஏற்றப்படலாம்.

- கட்டடங்களில் கொடிக்கம்பத்தில் ஏற்றப்படும் தேசியக்கொடி நாள்தோறும் கதிரவன் எழுந்ததற்குப் பின்னர் ஏற்றப்பட்டு, மறைவதற்கு முன்னர் இறக்கப்பட வேண்டும்.

- நாட்டின் எல்லைப்புறப் பகுதிகளிலும், குறிப்பிட்ட சில பொதுஇடங்களிலும் தேசியக்கொடி நாள் தோறும் பறக்கவிடப்படலாம்.

- வெளிநாடுகளிலுள்ள எமது பணியகங்களிலும், தூதரகங்களிலும் பகலில் எந்நாளும் எமது தேசியக் கொடி பறக்கவிடப்படலாம்.

- குறிப்பிட்ட சில நாட்களில் மட்டும் பொதுமக்களின் வீடுகளிலும், கட்டடங்களிலும் தேசியக்கொடி பறக்க விடப்படலாம். ஆனால் இவை முறையாகக் கம்பங் களில் மட்டுமே ஏற்றப்படவேண்டும்.

- தெருவுக்குக் குறுக்காகவோ, பக்கமாகவோ கயிறு களில் தேசியக்கொடி தொங்கவிடப்படக்கூடாது.

- காலை 6 மணிக்கு முன்போ, மாலை 6 மணிக்குப் பின்போ தேசியக்கொடியை ஏற்றுதல் கூடாது. மாலை 6 மணிக்குப் பின் தொடங்கும் விழாக்களில் தேசியக்கொடியை ஏற்றுதல் கூடாது.


- கடும் மழையில் நனைந்து பறக்க முடியாத நிலையில் தேசியக்கொடியை ஏற்றுதல் கூடாது. கடும் மழையாயின் வெளியில் கொடியேற்ற நிகழ்வைத் தவிர்க்கவேண்டும்.

- தேசியக்கொடியைத் தலைகீழாகப் பறக்கவிடக் கூடாது.

- தேசியக்கொடியிலுள்ள புலி கொடிக்கம்பத்தைப் பார்த்தவாறு பறக்கவிடப்படக் கூடாது. புலியின் பார்வை கொடிக்கம்பத்திற்கு எதிர்ப்புறமாகக் கொடி பறக்கும் பக்கமாக இருக்கும்வகையில் கொடி பறக்கவிடப்பட வேண்டும்.



பொதுக்கூட்ட மேடைகளில் பேச்சாளர்களின் தலைக்கு மேலாகப் பின்புறத் தட்டியில் தேசியக்கொடியைக் கட்டலாம்.



- தேசியக்கொடியைக் கீழிருந்து பறந்தபடியிருக்கும் நிலையிலேயே ஏற்றவேண்டும். மடித்தபடி மேலே ஏற்றி அங்கிருந்து விரிந்து பறக்கும் வகையில் தேசியக்கொடியை ஏற்றுதல் கூடாது,

- தேசியக்கொடியை ஏற்றுபவர் கூடியவரை கொடி வணக்கம் செலுத்த அணிவகுத்து நிற்கும் மக்களுக்கும், கொடிக்கம்பத்துக்கும் இடையில் நின்று கொடியை ஏற்றுதல் கூடாது.

- தேசியக்கொடியை ஏற்றும்போது விரைவாக ஏற்றக் கூடாது- மெதுவாகவும், சீராகவும் கொடியை ஏற்றுதல் வேண்டும்,

- தேசியக்கொடி ஏற்றப்படும்போது கொடிவணக்கப் பண் இசைக்கப்படலாம்.

- தேசியக்கொடி ஏற்றப்படும்போது அனைவரும் எழுந்துநின்று வணக்கம் செலுத்துதல் வேண்டும்.

- கொடிவணக்கத்தின்போது சீருடையில் இருக்கும் பணி ஆளணியினர் (சாரண இயக்கத்தவர், பரியோவான் முதலுதவிப்படை முதலியன) தத்தமது பணிகளுக்குரிய கட்டளைகளில் விதித்துரைக்கப்பட்டவாறு முறைப்படி கொடி வணக்கம் செலுத்துவர்.

- சீருடை அணிந்தவர்கள் தவிர ஏனையோர் தலையணி (தொப்பி) அணிந்திருப்பின் தேசியக்கொடி ஏற்றப்படும் வேளையில் அவற்றைக் களைதல் வேண்டும். தலையணியைக் களைந்தபின்பே கொடி வணக்கம் செலுத்தவேண்டும்.


- தேசியக்கொடி ஏற்றப்படுவதுபோன்றே இறக்கப்படுவதும் ஒழுங்குமுறையிலான சிறப்பு நிகழ்வாகவே இருக்கவேண்டும். கொடியை இறக்குபவரும் முதன்மையானவராக, தகுதியானவராக இருத்தல் வேண்டும். கொடியேற்றுபவர் நிகழ்ச்சியின் இறுதிவரை இருந்தால் அவரே கொடியை இறக்குதல் வேண்டும்.

- தேசியக்கொடி இறக்கப்படும்போது நிலத்தில் விழாது கைக்கு எட்டக்கூடிய உயரத்தில் வைத்தே கைகளில் ஏந்தி எடுத்தல் வேண்டும்.

- தேசியக்கொடி இறக்கப்படும் நிகழ்வின்போது எவரும் கையொலி எழுப்பக்கூடாது. அந்நிகழ்வு அமைதியாக நடைபெறவேண்டும்.

- தேசியக்கொடி பொதுவாக மாலை 6 மணிக்கு முன்னர் முறைப்படி இறக்கப்படவேண்டும். கொடியேற்றித் தொடக்கப்படும் நிகழ்ச்சிகள் மாலை 6 மணிக்குப் பின்னரும் தொடருமாயின் நிகழ்ச்சி முடிவுறும்வரை கொடிக்கு வெளிச்சம் பாய்ச்சப்படவேண்டும். இரவில் நிகழ்ச்சி முடிவுற்றதும் கொடியை அமைதியான முறையில் இறக்கலாம்.

- கொடியேற்றித் தொடக்கப்படும் நிகழ்ச்சிகள் நாட்கணக்கில் தொடருமாயின் அந்த நிகழ்ச்சிகள் முடிவுறும்வரை தேசியக்கொடி இரவும் தொடர்ச்சியாகப் பறக்கவிடப்படலாம். ஆனால் இருளில் கொடிபறக்காமல், இரவில் பறக்கும் கொடிக்கு வெளிச்சம் பாய்ச்சி கொடி பறப்பது தெரியக்கூடியதாக இருக்கவேண்டும். நிகழ்ச்சிகள் முடிவடைந்தபின் முறைப்படி தேசியக் கொடி இறக்கப்படவேண்டும்.



நாட்டின் துயர நிகழ்வுகளின்போது தேசியக்கொடி கொடிக் கம்பத்தின் உச்சிவரை ஏற்றப்பட்டு பின் கொடிக்கம்பத்தின் நடுப்பகுதிவரை இறக்கிக் கட்டிப் பறக்கவிடப்படல் வேண்டும்.

**கொடி வணக்க நிகழ்வை ஒழுங்கு செய்பவர்களுக்கு;**

தேசியக்கொடியை ஏற்றுகின்ற நிகழ்வின் போது தவறுகள், தடங்கல்கள் ஏற்படாது இருப்பதற்கு நிகழ்ச்சி தொடங்குவதற்கு முன்கூட்டியே தேசியக்கொடியை கம்பத்தில் ஏற்றி ஒத்திகை பார்த்தல் வேண்டும்.

- தேசியக்கொடி தலைகீழாக அல்லாமல் நேராக இருக்கின்றதா?
- தேசியக்கொடியில் கயிறு கோர்ப்பதற்கான மடிப்பு புலியின் பார்வைக்கு எதிர்ப்புறமாகத் தைக்கப் பட்டிருக்கின்றதா?
- கொடி கிழியாமல், மங்காமல் ஏற்றக்கூடிய நிலையில் இருக்கின்றதா?
- நிகழ்வில் ஏற்றப்பட இருக்கும் ஏனைய கொடி களைவிட தேசியக்கொடி சிறிதாக இல்லாமல் இருக்கின்றதா?
- கொடியை ஏற்றுவதற்கான கயிறு கொடிக்கம்பத் தின் உயரத்தைவிட இருமடங்கிற்குக் குறையாம லும், உறுதியாகவும் இருக்கின்றதா?
- தேசியக்கொடி ஏற்றப்படும் கொடிக் கம்பம் உறுதி யாக நாட்டப்பட்டிருக்கின்றதா?
- கொடிக்கம்பம் தேசியகொடி ஏற்றுவதற்கு வேண் டிய உயரத்தை, உறுதியை உடையதாக இருக் கின்றதா?

என்பவற்றையெல்லாம் முன்கூட்டியே உறுதி செய்து கொண்டால் கொடியேற்ற நிகழ்வில் எதுவித தவறோ, தடங்கலோ ஏற்படாது தவிர்க்கலாம்.

தேசியக்கொடியேற்ற நிகழ்வில் ஏற்படும் தவறுகள், தடங்கல்களுக்கு நிகழ்ச்சியை ஒழுங்கு செய்யும் பொறுப் பாளரே பொறுப்பாவார்.

# "எங்கள் தேசியக் கொடியிது"

(திரு. புதுவை இரத்தினதுரை)

ஏறுதுபார் கொடி ஏறுதுபார்
ஏறுதுபார் கொடி ஏறுதுபார் - இங்கு
ஏறுதுபார் கொடி ஏறுதுபார் - தமிழ்
ஈழத்தின் வேதனை தீர்த்தகொடி
எட்டுத்திக்கிலும் மானத்தைச் சேர்ந்தகொடி
காலத்தை வென்றுமே நின்றகொடி - புலி
காட்டிய பாதையில் சென்றகொடி (ஏறுதுபார்)

செக்க நிறத்திலே வேங்கை நடுவிலே
சீறிடும் கொடியிது - தமிழ்
மக்களைக்காத்த நம்மான மாவீரரை
வாழ்த்திடும் கொடியிது - புலி
வீரத்தின் கொடியிது
மாவீரனின் கொடியிது (ஏறுதுபார்)

எத்தனை எத்தனை வேங்கைகள் ரத்தத்தில்
ஏறிய கொடியிது - பெரும்
சத்திய வேள்வியில் செத்தவர் மீதினில்
சாற்றிய கொடியிது - தமிழ்
ஈழத்தின் கொடியிது - புலி
ஏந்திய கொடியிது (ஏறுதுபார்)

சாதிகள் சண்டைகள் சாய்த்துவிழுத்திய
சாதனைக் கொடியிது - சங்கு
ஊதி முழங்கிட ஊர்மனையாவிலும்
உலவிய கொடியிது - சம
தர்மத்தின் கொடியிது - எங்கள்
தாயவள் கொடியிது (ஏறுதுபார்)

ஆயிரமாயிரம் பேரென வேங்கைகள்
ஆக்கிய கொடியிது - பிர
பாகரன் என்றிடும் காவியநாயகன்
போற்றிடும் கொடியிது - தமிழ்த்
தேசத்தின் கொடியிது - எங்கள்
தேசியத் கொடியிது. (ஏறுதுபார்)

தாசன் அச்சகம், யாழ்ப்பாணம்.

## தேசியக்கொடி ஏற்றப்படும் நாள்கள்

தமிழீழ மாவீரர் வாரத்திலும், தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியற்றுறை நடுவப்பணியகத்தினால் தேசியக் கொடி ஏற்றும்படி வேண்டப்படும் நாள்களிலும், தேசியக் கொடி ஏற்றப்படவேண்டும். திணைக்களங்கள், பணியகங்கள் திறப்பு விழாக்களிலும் விளையாட்டு விழாக்கள், கலைவிழாக்கள், ஆண்டு விழாக்கள், பரிசளிப்பு விழாக்கள் போன்ற நிகழ்வுகளின்போது உரிய இடங்களில் முன் ஒப்புதலைப்பெற்று தேசியக்கொடியேற்ற நிகழ்வு ஒழுங்கு முறைமைகளுக்கு அமைய தேசியக்கொடியேற்ற, கொடி வணக்க நிகழ்வுகளை மேற்கொள்ள வேண்டும்.

## தேசியக்கொடிகளைப் பெறுதல்

தேசியக்கொடியேற்றி தொடங்கவேண்டிய நிகழ்வுகளுக்கு முன்கூட்டியே உரிய இடங்களில் தேசியக்கொடிகளையும். தேசியக்கொடி ஏற்றலுக்கான ஒழுங்குமுறை அறிவுறுத்தல்களையும் பெற்று தேசியக் கொடியேற்ற, கொடிவணக்க நிகழ்வுகளை மேற்கொள்ள வேண்டும்.

பாடசாலைகள் கல்வித்துறை தொடர்பானவர்கள் கல்விக்கோட்டப் பணிமனைகளிலிருந்தும் கல்விக் கழகப் பணிமனையிலிருந்தும் தேசியக்கொடிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஏனைய துறையினர் விடுதலைப் புலிகள் அமைப்பின் கோட்ட மாவட்ட பணிமனைகளினூடாக தேசியக் கொடிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

பெறப்படும் தேசியக்கொடிகள் உரிய முறையில் பேணப்பட்டு நிகழ்வின் மறுநாள் பெறப்பட்ட இடங்களில் திரும்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.